## மெட்ரோ ரயில் திட்டம்

# மின் துாக்கிகள், நகரும் படிக்கட்டுகள் தயாரிப்பு துரிதம்

சென்னை, நவ. 23-

மெட்ரோ ரயில் திட்டத்திற்கு, பூந்தமல்லி தொழிற்சாலையில் மின் துாக்கிகள், நகரும் படிக்கட்டுகள் தயாரிக்கும் பணி துரிதமாக நடந்து வருகிறது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் 45 கி.மீ., துாரம் ரயில் பாதை அமைக்கப்படுகிறது. 32 ரயில் நிலையங்கள் அமைகின்றன. இதில், சுரங்க பாதையில் 19 நிலையங்களும், மேம்பால பகுதியில் 13 நிலையங்களும் அமைகின்றன.



பூந்தமல்லி தொழிற்சாலையில் மின் துாக்கிகளை மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

### சீனாவில் இருந்து...

இந்த நிலையங்களில், பயணிகள் பயன்படுத்துவதற்காக, 198 கோடி ரூபாய் செலவில் 296 நகரும் படிக்கட்டுகள், 122 மின் துாக்கிகள் ஆகியவை, 'ஜான்சன் லிப்ட்ஸ்' மற்றும் 'எஸ்.ஜே.இ.சி.,' ஆகிய நிறுவனங்களிடம் இருந்து வாங்கப்படுகின்றன.

இவற்றை, நிலையங்களில் அமைத்தல், 2020ம் ஆண்டு வரை பராமரித்தல் ஆகியவை இந்த நிறுவனங்களிடமே ஒப்பந்தம் மூலம் அளிக்கப்பட்டுள்ளன.

இதற்காக மின் துாக்கிகள் மற்றும் நகரும் படிக்கட்டுகளுக்கான உதிரி பாகங்கள், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, பூந்தமல்லியில் உள்ள தொழிற்சாலையில் ஒருங்கிணைக்கும் பணி நடக்கிறது. இந்த பணியை, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள், நேரில் சென்று ஆய்வு செய்து வருகின்றனர்.

### சக்கர நாற்காலி வசதி

இது குறித்து மெட்ரோ ரயில் திட்ட அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மின் துாக்கிகளில் 13 பேர் வரை செல்லலாம். மாற்றுத்திறனாளிகள், சக்கர நாற்காலியுடன் மின்துாக்கிகளில் செல்ல முடியும். பார்வையற்றோருக்கு 'பிரெய்லி' முறையிலான பட்டன்களும் வைக்கப்படும்.

தானியங்கி மீட்பு சாதன வசதிகள் செய்யப்படும். நகரும் படிக்கட்டுகளில், மணிக்கு 9,000 பயணிகள் செல்லலாம்.

நிலையத்தில் உள்ள கண்காணிப்பு அமைப்பின் மூலம், மின் துாக்கிகள் கண்காணித்து இயக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.